# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



(81) (7) 81

அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
முதன்மை தலைமை பொறியாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை 600 003

---

**கடித எண் பி2/3811/2015** **தேதி 26.09.2017**

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – ஊக்கத் தளப் பரப்புடன் கூடிய திட்ட அனுமதி – நில அளவை எண் 444/1 சோழிங்கநல்லூர் கிராமம் மற்றும் நில அளவை எண் 651/15 சோழிங்கநல்லூர் கிராமத்தில் , மனை எண் 11, சப்தகிரி நகர் பிரதான சாலை, சப்தகிரி நகர், சோழிங்கநல்லூர், சென்னை–இல் வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன் 72 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப் பிரிவு எண் 193/2015 நாள் 10.3.2015 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 09.09.2009.
3. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 28.3.2012.
4.அரசாணை (பல்வகை) எண் 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 30.12.2013.
5.வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவது தொடர்பான இவ்வலுவலக கடித எண் பி2/18737/2012 நாள் 20.6.2013.
6. விண்ணப்பதாரரிடமிருந்து கோப்பு எண் பி2/18737/2012ல் கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 19.7.2013
7. இவ்வலுவலக கடித எண் பி2/18737/2012ல் நாள் 18.2.2015ல் விண்ணப்பத்தை திருப்பி அனுப்பப்பட்டது.
8. அணுகு சாலைக்கான நிலத்திற்கு தான பத்திர எண் 2034/2014 நாள் 21.3.2014 மூலமாக செ.பெ.வ. குழுமத்திற்கு தானமாக 04.06.2015 நாளில் ஒப்படைக்கப்பட்டது.
9. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவது தொடர்பான இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 1.9.2015.
10. உயர்நீதி மன்றத்திலிருந்து W.P. எண் 36022/2015 மற்றும் M.P. எண் 1 மற்றும் 2/2015 நாள் 7.1.2016 அன்று பெறப்பட்ட பேராணை
11. உயர்நீதி மன்றத்திலிருந்து W.A. எண் 347/2016 மற்றும் C.M.P. எண் 5127/2016 நாள் 22.3.2016 அன்று பெறப்பட்ட பேராணை.
12. விண்ணப்பதாரரின் கடிதம் கிடைக்கப்பெற்ற நாள் 17.8.2017.

**

நில அளவை எண் 444/1 சோழிங்கநல்லூர் கிராமம் மற்றும் நில அளவை எண் 651/15 சோழிங்கநல்லூர் கிராமத்தில், மனை எண் 11, சப்தகிரி நகர் பிரதான சாலை, சப்தகிரி நகர், சோழிங்கநல்லூர், சென்னை–இல் வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன் 72 குடியிருப்புகள் ஊக்கத் தளப் பரப்புடன் கூடிய குடியிருப்பு உபயோகம் கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள், பார்வை–5ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 5–இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ. 1,45,000/– | இரசீது எண் 01801 நாள் 17.7.2013 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 13,000/– | |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.4,20,000/– | |
| திறந்தவெளிக் கட்டணம் | ரூ.57,60,000/– | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 6,00,000/– | இரசீது எண் SD/218 நாள் 17.7.2013 |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 72,000/– | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ. 10,000/– | |
| உள்கட்டமைப்பு வசதிக் கட்டணம் | ரூ.31,50,000/– | இரசீது எண் 01802 நாள் 17.7.2013 |
| ஊக்க தளப்பரப்பு கட்டணம் | ரூ.4,90,000/– | இரசீது எண் 01803 நாள் 17.7.2013 |
| மொத்தம் | ரூ.1,06,60,000/– | |

For BHAGGYAM CONSTRUCTIONS

Prop.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும்,. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7 திட்ட அனுமதி எண் **பி/சிறப்புக் கட்டிடம் / 264 A to E /2017** நாள் **26.09.2017** என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி **26.09.2017** இருந்து **25.09.2022** வரை செல்லுபடியாகும். **(Permit No.11609)**.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பல்லாவரம் நகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. விண்ணப்பதாரர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், இக்கட்டிட மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

உறுப்பினர்–செயலருக்காக.

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

For BHAGGYAM CONSTRUCTIONS

Proprietor

நகல்:
1. திரு சரத் வாசன்ஜி
   C/o. பாக்கியம் கன்ஸ்டரக்ஷன்ஸ்
   எண் 3 , சாரங்கபாணி தெரு, தி. நகர்,
   சென்னை 600 017
2. உறுப்பினர், உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
3. வருமானவரி ஆணையர், 168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
4 [illegible] செயலாக்கப்பிரிவு [illegible].

(7)

83

(83)

. 1.

# Chennai Metropolitan Development Authority
## PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11609

Date of Permit 26.9.2017

B1 SPL-BLDG/264 A to E/2017

Premium FSI

File No. B2/3811/2015

Name of Applicant with Address Mr. SHARAD VASANJI.
C/o. Bhaggyam constructions
No. 2, Sarangapani Street, T.Nagar, Chennai - 600 017

Date of Application 10.3.2015

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Charge in use of Land~~/Building

Site Address Proposed construction of Stilt floor + 4 Floors Residential building with 72 DU at

Division No. Saptagiri Nagar Main Road, Saptagiri Nagar, Sholinganallur, Chennai - comprised in S.No. 444/1 of Sholinganallur village, Plot No. 11 comprised in S.No. 651/15 of Sholinganallur village, within Greater Chennai Corporation limit

Development Charge paid Rs. 1,45,000 Challan No. 01801 Date 17.7.2013
(DC Amt was already remitted in the Back File No. B2/18737/2012)

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building construction/~~change in use of land~~/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 25.9.2022

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

28/09/2017

For MEMBER SECRETARY

25.9.2017

For BHAGGYAM CONSTRUCTIONS

VK

Proprietor

பெருநகர சென்னை மாநகராட்சி

**Greater Chennai Corporation**

நகரமைப்பு பிரிவு - பணித்துறை

## Town Planning Section-Works Department

### Building Permission

(1919 ஆம்ஆண்டின் சென்னை மாநகராட்சி சட்டம் 238 வது பிரிவின் படி)

(1919 MCMC Act Section 238)

| | | | |
|---|---|---|---|
| கட்டட அனுமதி எண்/ Building Plan No | | திட்ட அனுமதி எண்/Plan Submission No | |
| CEBA/WDCN15/00002/2018 | | B2/3811/2015 - 26/09/2017 | |
| மண்டலம் / Zone | கோட்டம் / Ward | அனுமதி நாள் / Approval Date | மனுபெறப்பட்ட நாள்/ Application Date |
| N15 | N197 | 04/01/2018 | 04/01/2018 |
| மனுதாரரின் பெயர் மற்றும் குடியிருப்பு முகவரி / Applicant name & address | | Mr. SHARAD VASANJI-NO.2, SARANGAPANI STREET, T.NAGAR, CHENNAI-600017. | |
| மேம்பாட்டு தன்மை / Service Type | | CMDA Proposal- only for Building Permit | |
| மனை அமைவிடம் / Plot address | | Block No:-,Plot No:11, Survey No:444/1, 651/15, SHOLINGANALLUR VILLAGE, SAPTHAGIRI NAGAR MAIN ROAD, SAPTHAGIRI NAGAR, SHOLINGANALLUR, CHENNAI, 600119 | |
| Building License Fees | | 1275000 | |
| Road cut charges - CMWSSB SEWERAGE | | 13000 | |
| Road cut charges - CMWSSB, WATER | | 13000 | |
| Road cut charges - TNEB | | 13000 | |
| Scrutiny Fees | | 600 | |
| Tentative improvement charges | | 310000 | |
| மொத்தக் கட்டணம்/ Total (In Rs.) | | 1624600 | |

Amount (in words): Rupees Sixteen Lakhs Twenty Four Thousands Six Hundred Only

M.W.G.W.F. DD Details : DD Number: 743666 Amount: 1568000 Rs. Date:19/12/2017 Bank:SYNDICATE BANK

பின் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கு ஒப்பளிக்கப்பட்ட வரைபட நகலின்படி அனுமதி

Sanctioned for CMDA Proposal- only for Building Permit Subject to Terms and Condition on Rear Side and as per Sanctioned plan copy.

இந்த அனுமதி 03/07/2018 ஆம் தேதிக்குள் வேலை தொடங்காவிட்டால் காலாவதியாகிவிடும் தொடங்கப்பட்டிருந்தால் கட்டிட அனுமதி

முடிவு நாள் 03/01/2020

This Sanction will expire if the construction is not started with in 03/07/2018

If Construction started Building Permit is valid up to 03/01/2020

Assistant Executive Engineer (T.P.)

Executive Engineer (T.P.)

For BHAGGYAM CONSTRUCTIONS

Proprietor



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate